Regd. M. No. 4565

# தமிழ்
# மருத்துவப் பொழில்

(TAMIL SIDDHA MEDICAL MAGAZINE)

திங்கள் வெளியீடு.


| மலர் 3 | மே 1943 | இதழ் 5. |
|---|---|---|



ஆசிரியர்:

தமிழ்ப் பண்டிதரும், மருத்துவ பண்டிதருமான

மாங்காடு. வடிவேலு முதலியார்.



உரிமையாளர்:

காரியக்கமிட்டியார் : சித்த மாணவர் கழகம்.

கவர்ன்மெண்ட் இந்திய மருத்துவ பாடசாலை

கீழ்ப்பாக்கம், மதராஸ்.

## 1943-ம் ஆண்டு எப்ரல்மீ L. I. M. சோதனையில் தேருத சித்தமாணவர்களின் பெயரும் தேர்ச்சியடையாத பாடங்களும்.

### IV ஆண்டு

*s*—Surgery. *w*.—Midwifery. *j*.—Jurisprudence.

T. T. S. கிருஷ்ணன் s.w.j.
C. B. மணவாளன் s.
J. கிருஷ்ணன் s.w.j.
K. இராஜு பிள்ளை s.w.
R. குஞ்சம்மாள் s.w.j.
P. K. சரணம்பாள் s.
K இராதகிருஷ்ணன் s.j.

### III ஆண்டு

*h*.—Hygiene. *p*—Pathalogy. *c*—Classics.

M. சிதம்பரம் h.c.
S. N. இலக்ஷிமிநாராயணன் h.p.c.
K. ஜகதீசன் c.
C. P. இராமநாதன் p.c.

### II ஆண்டு

*a*.—Anatomy. *p*.—Physiology *f*—Fundementals.

B. பாலசுப்பு a.
A. பாலசுப்பிரமணியம் a.
T. S. தாமோதரன் a.
N. இராமநாதன் a.p.f.
K. வெங்கடேச நாயுடு f.

### I ஆண்டு

*g*.—General Science. *m*.—Materia Medica General.
*s*.—Materia Medica Special.

M. கிருஷ்ணன் g.m.s.
T. T. நவநீத கிருஷ்ணன் g.m.s.
மற்றவர்கள் g.s.

# தமிழ் மருத்துவப் பொழில்

திங்கள் வெளியீடு

மலர் 3 | மே 1943 | இதழ் 5

## ஐந்தாம் ஆண்டு L.I.M. சோதனை

இரண்டாம் உஸ்மான் கமிட்டியாரின் சிபார்சின்படி ஐந்தாம் ஆண்டு L.I.M.களுக்கு 1944-ம் ஆண்டிலிருந்து சோதனை (பரிட்சை) வைப்பதாக சர்க்கார் கட்டளையிட்டிருக்கின்றனர். இப்பரிட்சையில் மாணவர்கள் நோய்கணிப்பு முதலியவைகளைச் செய்வதிலும், ஐந்தாம் ஆண்டில் வைத்தியசாலையில் அவர்கள் எழுதும் பல பிணி ஏடு (Case Sheets)களிலும் சோதிக்கப்படுவர் என அறிகிறோம். இப்பரிட்சைக்கு மாணவர்களைத் தக்கவாறு பழக்கப் போதுமான ஏற்பாடுகளை சர்க்கார் செய்து வருவதாக நமக்கு தெரியவில்லை.

உஸ்மான் கமிட்டியாரின் சிபார்சு என்ன? சோதனை வைக்க வேண்டுமென்று கூறுவதற்கு முன் மாணவர்களுக்கு பழக்க முண்டாக போதுமான சாதனங்கள் இவ்வைத்தியசாலை (Govt. Hospital of Indian Medicine)யில் இல்லையென்றும், அவைகளை ஏற்படுத்த வேண்டுமென்றும் கூறியிருக்கின்றனர். ஆகையால் முதலில் இவ் வசதிகளை ஏற்படுத்தி, பின்னர் சோதனை செய்தல்வேண்டும். இது தான் முறைமை-நீதி. இதைவிட்டு பரிட்சையைமட்டும் வைத்தால் என்ன பலன்? அதிக மாணவர்கள் தேர்ச்சியடையார். அப்பொழுது அவர்களும், அவர்கள் படித்த பள்ளியுந் தான் குறை கூறப்படும். இதுதான் சர்க்காரின் விருப்பமோ? இராது. ஆகையால் உஸ்மான் கமிட்டியாரின் சிபார்சை ஒருவாறு ஏற்று பரிட்சை வைக்க முன் வந்த சர்க்கார், அக்கமிட்டியார் கூறியபடியே மாணவர்களுக்கு அதிக பழக்கத்தை யளிக்கத், தக்க வசதிகளை இவ்வைத்தியசாலையில் இவ்வாண்டே ஏற்படுத்த முன் வருவர் என நம்புகிறோம்.

ஒருகால், போரின் நிமித்தம் அங்ஙனம் செய்ய இப்பொழுது இயலாதெனின், அவ்வசதிகளை ஏற்படுத்தும்வரை ஐந்தாம் ஆண்டு சோதனையை தள்ளி வைப்பதே உசிதமாம்.

# ஒப்பு நோக்கு

குவளைவிப்புருதியும் டேக்ரோசிஸ்டைட்டிசும்

---

## இதுவு மதுவா?

ரூ. இ.

குவளைவிப்புருதி

" நீர்விடுக்குங் கடைக்கண் தத்தும் நிமைகனம் சீயும் பாயும்
ஊர்வது மிகவுண் டாகும் உறுத்தியே சிவந் தெரிக்கும்
சீர்பெற விழிக்க வொட்டா சிறிதுநாள் குணமுங் காட்டும்
கூர்குண மிவைகள் தானும் குவளை விப்புரு தியாமே."

குறிப்பு:—கட்டியுடைந்தால் சீழ் வெளிப்படுதல்போல் சீழ் இமையினின்று சீழ் வெளிப்படுதலின் குவளை விப்பிருதி என்றும் குவளையிலுண்டாம் கட்டியை படுவன் என்றும் கூறினர்.

(பொ-ரை.) கண்ணிலிருந்து நீர்வடியும். மூக்கருகிலுள்ள கடைக் கண்ணுக்கும் மூக்கின் அடிபாகத்திற்கும், மத்தியிலுள்ள இமை வீங்கியிருக்கும். இமையிலிருந்து சீயும் வெளிப்படும். மூக்கருகிலுள்ள கடைக்கண்ணில் சிவப்பும், தினவும், உறுத்தலும், கூச்சமும் இருக்கும். சிறிது நாள் குணத்தைக் காண்பித்து திரும்பத் திரும்ப உண்டாகும். இது குவளைவிப்புருதி என்னும் நோயாம்.

அ. ந. வி.

## DACRYOCYSTITIS.

It is generally Chronic. There is epiphora aggravated by exposure to wind etc. Usually there is swelling at the site of the sac. Often the caruncle and neighbouring parts of the conjunctiva are inflammed. On pressure over the sac, fluid regurgitates through the punctæ. The fluid may be tears, mucus or muco-pus.

*(Page 928, Parson's Diseases of the Eye.)*

# கண்ணோயும் காற்றுக்காலமும்

(34-ம் பக்கத் தொடர்ச்சி)

இனி பில்லத்தைக் கூறுவாம்

கருகிய இமையி னுள்ளே
  கதித்த துர்மாமிசம் போல்
அருவியே உறுத்தி நொந்து
  அதிகமாய் சிவந்து கூசும்
மருவிய பூவுந் தோன்றும்
  மாறாதே பீளை பாயும்
பெருகிய நீரு முண்டாம்
  பில்லமா மென்று சொல்லே.

இதன் பொருள்

மேலிமைக்குள் கனமான சதை வளர்ந்து, அருகல், உறுத்தல் முதலியவற்றால் கண்கள் நொந்து அதிக சிவப்போடு கூச்சத்தை உண்டு பண்ணும். கருவிழியில் பூ உண்டாகும். ஓயாமல் பீளை உண்டாகும். ஊற்று ஜலம்போல் நீர் வடிந்து கொண்டிருக்கும்.

இச் செய்யுளில் மருவிய பூவுந்தோன்றும் என்று கூறப்பட்டிருக்கிறது. பில்ல ரோகத்திற்கு கருவிழியில் பூ இருக்கக் காண்கிறோம், பில்ல ரோகத்திற்கு கண்டர் அஞ்சனம் என்று ஒரு மருந்து சொல்லப்பட்டிருக்கிறது, கண்டர் என்பது துருசுக்குப் பெயராகும். ஆங்கிலத்தில் (Copper Sulphate) என்பர். இதைக் கண்ணிலிட்டால் ஒரு பூ விழுந்திருப்பதோடு (Cornea) அதாவது கருவிழி முழுவதும் பூ உண்டாகிவிடுகிறது. ஆங்கிலமுறைப் பண்டிதர்களும் துருசை உபயோகப்படுத்துவதுண்டு. இது "குளிக்கப்போய் சேற்றைப் பூசிக்கொள்ளுவது போலாகிறதன்றோ"? ஆகையால் துருசுப்பிரயோகம் கூடாதென்று கண்டிக்கிறேன். பின்னை இந்த அபஸ்மார ரோகத்திற்கு என்னதான் செய்கிறதென்று வருந்த வேண்டாம். எம்மிடம் ஐங்கரனருளால் கிடைத்து, அனுபவித்து வருகிற அருமையான மருந்தொன்றுண்டு.

இனி நேத்திர சூலையைக் கூறுவாம்

நயனத்தில் வாயுவு நின்று
  நவில் புருவத்தில் குத்தி
செயல்கெட விரண முண்டாய்த்
  திரண்டு நீர்மூக்கில் வீழும்

இயல்பினை யறிந்து கொண்டு
இவ்வலி ரோக மாற்ற
அயனுரை செய்த உண்மை
மருந்து நீஅறிந்து செய்யே.

இதன் பொருள்

கண்ணில் வாய்வு இருந்துகொண்டு புருவங்களில் குத்த லுண்டாகும். மூக்கிலிருந்து நீர்வடியும், இந்தக் குணங்களைக்கண்டு இது நேத்திர சூலையென்று நிச்சயித்து சாஸ்திர சம்மதமான மருந்து களை நீ அறிந்து செய்வாயாக.

இதுவுமது

தீருமே வாத நோவு சிவப்புண்டாய் கனத்துக் கண்ணை
சேருமே பரிக்கு மாப்போல் தினவுடன் வலியு முண்டாம்
நீருமே கனைத்துப் போட்டால் நின்விரல் உலர்ந்து காணும்
சாருமே இரவில் நோவு தானது மிக வுண்டாமே.

இதன் பொருள்

கண்கள் சிவந்து, கண்களைப் பிடுங்குவதுபோல் அரிப்பும் வலியு முண்டாகும், கண்ணிலிருந்து வடியும் ஜலத்தை விரல்களில் தொட் டுப் பார்த்தால் அதி சீக்கிரத்தில் உலர்ந்து விடும். இது வாத நோயானபடியால் இரவில் வலிமிகுந்து தோன்றும்.

இதுவுமது

நேத்திர வாயுவு நின்று நெருங்கிய இடி யுண்டாகி
மாத்திர கண் சிவந்து வலித்திடும் சிரசில் குத்தும்
கேத்திர கேதம் சூகம் தம்பவம் கீசம் முற்றி
நீத்திலா காசம் போல நின்முழி குருட தாமே.

இதன் பொருள்

நேத்திரத்தில் வாயு இருந்து கொண்டு தலையில் இடியைக் கொடுக்கும். கண் சிவந்து காணும், கேத்திரம், கேதம், சூகம், தம்பவம், கீசம், காசம் முதலான ரோகங்களைப்போல் நேத்திர சூலை கண்ணைக் குருடாக்கிவிடும்.

இனி வெண்ணெக்காட்டைக் கூறுவாம்

கூசுங்கடுக்கும் நீர் முட்டும் குளிர்ந்த சரீரம் எரிவுண்டாம்
மாசுங்கண்ணும் சிறு சிவப்பாம் மதியந் தன்னில் முழிக்காது
தேசுங் குன்றும் நடக்கவொட்டா தியக்கக் குணங்கள் பலவாகும்
பேசுங் குண வெண்ணெக்காடு பேரிட் டழைப்பார் பெரியோரே.

### இதன் பொருள்

கண்கள் கூசும், கடுக்கும், நீர்வடியும், சரீரத்தில் எரிச்சலுண்டாகும், கண் சிறு சிவப்பாயிருக்கும். நிலா வெளிச்சத்தில்கூட கண்ணை விழிக்க முடியாது. நோயாளியின் இயற்கைக் குணங்கள் வேறுபடும். இவ்வித குணங்களையுடைய வியாதிக்கு வெண்ணோக்காடென்று பெரியோர்கள் சொல்லுவார்கள். இதை உலகத்தவர் வெங்கடுப்பு என்பார்கள்.

### இனி அன்ன கோபத்தைக் கூறுவாம்

கனத்ததோர் நயனத்துள்ளே கனவெழல் எரித்துவிம்மி
உனத்தமாம் விழிபுடைத்து உலையினில் மெழுகுபோல
சினத்தது கண்ணும் நொந்து சிவந்து தானருகிற்றானால்
அனர்த்தமாம் அன்னகோபம் அறிந்து நீ மருந்து செய்யே.

### இதன் பொருள்

கண்ணுக்குள் எரிச்சலுண்டாகும், கண்கள் விம்மியிருக்கும் விழிகள் புடைத்து உலையில் வைத்த மெழுகுபோல சிவந்து உருத்தலோடிருக்குமானால் அன்னகோபமென்று சொல்லப்படும். இதற்கு இன்ன மருந்திடுவது என்று தெரிந்து பண்டிதம் செய்யவேண்டும். இல்லையாகில் அனர்த்தமாய் முடியும்.

ஆகையால் சகோதிரர்களே! கேவலம் கண்வலிதானே என்று அலட்சியமாய் கண்டனவற்றை யெல்லாம் கண்ணினுட் பெய்து, பூவிழுதல், குந்தம் தள்ளுதல், பார்வை மந்தமாதல் முதலியவை களுக்குட் படுத்தாது கண்ணில் நோய் கண்டவுடன் ஒரு கண் வைத்தியனை யடுத்து சிகிச்சை செய்து கொள்ளவேண்டியது மிக்க அவசியமாயிருக்கிறது.

வாழிய நலனே! வாழிய நலனே!!

—::•::—

# செம்புச் செந்தூரம்

R. தியாகராஜன், L.I.M.

ஒரு பலம் சுத்தித்த செம்புப் பொடியை முப்பத்திரண்டு நாள்களுக்குள்ளே தாமரையிலைச் சாறு, காந்தை யிலைச்சாறு, சண்பகத்தின் சாறு, வேம்பின் சாறு இவைகள் ஒவ்வொன்றாலும் தனித் தனியே அரைத்து பில்லை தட்டிக் கவசித்துலர்த்திப் புடமிடவும். அப்பொழுது செம்பு செம்பசுமை நிறச் செந்தூரமாகும்.

## செம்புச் செந்தூரத்தின்

| துணைமருந்து | | தீரும் நோய்கள் |
|---|---|---|
| முலைப்பால் | — | மாரடைப்பு வாயு |
| வெண்கடுகின் இரசம் | — | முறைக்காய்ச்சல் |
| கற்கண்டு | — | வெப்பம் |
| வெந்நீர் | — | காசரோகம் |
| நீர்முள்ளி யிலைச்சாறு | — | தாபசுரம் |
| தண்ணீர்விட்டான் கிழங்கின் சாறு | | தலையிடிப்பு |
| பலாக்கனிச் சாறு | — | மரணவாதை வலி |
| தண்ணீர் | — | சரீரக்கடுப்பு வாதம் |
| வெள்ளுள்ளிச்சாறு | — | தளர்ச்சிநோய் |
| நெய் | — | சத்திநோய் |
| துளசிச்சாறு | — | செங்குட்டநோய் |
| வெல்லம் | — | இருமல் |
| கட்டுக்கொடிச் சாறு | — | வெள்ளைமேகம் |
| வில்வச்சாறு | — | உன்மத்தம் |
| தேன் | — | பாண்டுரோகம் |

### சிறு முறைகள்

சுத்தித்தச் செம்புப் பொடிக்கு பொன்னாங்காணிச் சாறு விட்டரைத்து முறைப்படி பத்துபுட மிட்டெடுக்கச் செந்தூரமாம் எனக் கொள்க. இது கை முறை.

### வேறு

தாம்பிரத்தை சிவதைச்சமூலத்தின் இரசத்தினாலும் தழுதாழைச் சமூலத்தின் சாற்றினாலும் பொதுவிதிப்படி யரைத்து பில்லை செய்து, உலர்த்தி, சில்லிட்டுச் சீலைசெய்துலர்த்தி புடமிட்டு ஆறினபிற கெடுக்கச் செந்தூரமாம் என்பதைக் கரிசிலில் கீழ்க்கண்டவடியால் உணரலாம்.

"சிவதை தழுதாழையினாற் சிந்தூரமாந் தாம்பிரமும்."

வேறு

"இந்திரன் புதல்வன்..............................
.........பகர்சலசத் துருமுனி வருளாலே
மேற்படி மேற்படி யக்கினி கணைபெற்றான்."

(பொ.ள்) கடுகிலைச் சாற்றைக் கொண்டு செம்புப்பொடியை முறைப்படி அரைத்து ஐந்து புடமிட்டெடுக்கப் பதினைந்து நாளில் செந்தூரமாம்.

(தே. ம. பாரதம்)

நிற்க, செம்பினால் கண்ணோய்கள் 96-ம் தீரும் என்று கூறப்பட்டிருப்பதன் காரணம் என்னவெனில், கண் தீக்கூற்றை உடைய உருப்பாகும். செம்பும் மேற்படி பூதாம்சம் பொருந்தியதாதலின் செம்பு கண்ணின் நட்புப் பொருளாகின்றது. நட்புப் பொருளாகின்றமையின் நோயை அணுகாமல் கண்ணைக் காக்கின்றது. இக் காரணத்தை முன்னிட்டே காசம் குத்தும் சஸ்திரமும், கண் மருந்துகள் இடுகின்ற அஞ்சனக்கோலும் மற்றைய சஸ்திரங்களும் சிறப்பாகச் செம்பினால் செய்யப்பட்டதாய் இருக்கின்றன. இதன் உண்மையை கீழ்க்கண்ட மேற்கோள்களால் நன்குணரலாம்.

காசம் குத்தும் சஸ்திரம்

"குத்துங் காசம் முத்துப்போல் கூடிப் பிரியுங் குன்றாமல்
சற்றுங் களிம்பொன் றில்லாமல் தாம்பிரச் சிலாகை முப்பட்டம்
போற்றும் ஆறுவிரல் நீளம் முன்னும் பின்னும் விரல்நீக்கி
மாற்று நிலையை வைத்தணைத்து தைத்துக் கட்டிக் குறைதீரே."

அஞ்சனக்கோல்

"அஞ்சன மெழுதுங் கோலின் அளவினை அறியக் கேளாய்
சஞ்சல மில்லாச் செம்பு வெள்ளியால் தங்கத்தாலும்
மிஞ்சுநல் விரலா லஞ்சு வீரற்கடை மீறிடாமல்
கஞ்சமாம் விழியிலா டும்.................."

கண்பற்று அரைக்கும் கல்வம்

"சோற்றுப் பற்றுந் திருநீறுந் தோகை யனையாள் முலைப்பாலும்
போற்றுஞ் செப்புக் கல்வத்திற் பொருந்தும் குழவியா லரைத்துக்
காற்றுப் படாமல் காத்திருந்து கண்ணைச் சூழவரைந் தக்கால்
தோற்றுப் போமே கண்ணோவுஞ் சொன்னார் முனிவர்
சொன்னாரே."

மற்றும் செம்பு, தாம்பிராதி, மகாதாம்பிராதி, பச்சைத்தாம்பிராதி, கனக தாம்பிராதி, குங்குமதாம்பிராதி, சரபேந்திரன் போன்ற கண்ணேய்கட்குரிய பெருமருந்துகளாகிய மாத்திரைகளில் சேர்கின்றதை நயன நூல்களில் பரக்கக் காணலாம்.

மற்றும் தனிச் செம்பு பிரளயகாலருத்திரன் போன்ற களங்குகளிலும், செம்பின் பற்பம் சன்னிக்காக உபயோகிக்கும் பைரவங்களிலும் பெரும்பாலும் சேர்வதைக் காணலாம்.

## செம்பின் நஞ்சுக் குறிகுணங்களும் தீர்வும்

சுத்தி, பற்ப செந்தூரமுறை பிசகினாலும், அதிக அளவில் மருந்தை பிரயோகித்தாலும், பத்தியம் தவறினாலும் செம்பால் விடமுண்டாம். அவ்விடக் குறி குணங்களை கீழ்க்கண்டு கொள்க.

பிசகு பற்பமுறை யெனினலத் தினெறி
பிறழுமச் சமிகு மிருமலே
பெருகு விக்கலொடு தலைதிருப்பி வரும்பிரமை
மிகுத்து வருமறல் கள்வாய்
பெருகி யக்குலரு முரமெரிச் சலுறும்
பிளிரல் மெத்தவரு மிவைகடீர்
பெலம ருத்துமுறை யுணர்மருத் துவர்கள்
பெலமுரைப் பரியதவர் செய்வார்.

(பொ-ள்) செம்பின் நஞ்சால், உடல் நன்னெறியினின்று மாறி அச்சத்தை விளைவிக்கும் இருமல், விக்கல், தலைதூக்கவொட்டா மயக்கம், கள்ளைப்போல் ஒழுகாநின்ற வாய்நீர், தொண்டை உணக்கம், மார்பு எரிச்சல், யானையின் பிளிரல் போன்ற ஒலி முதலிய குணங்கள் உண்டாம்.

மேல் குறிப்பிட்ட தீங்குகள் தீர எலுமிச்சம்பழச் சாற்றில் சுக்குத்தூளை கலந்து கொள்ள வேண்டும் என்ப.

இவ்வகை புரிந்த தாம்பிர பற்பத்
தியற்கையை யென் சொல்வேன் பிசகின்
இடையருக் களிம்பாற் கொல்லுவ ததுவே
யெலுமிச்சை சுக்கினு லதுபோம்.''

என்றாராகலின்.

குறிப்பு:—செம்பு சேர்ந்த கண் மாத்திரைகளை பன்னிரண்டு ஆண்டுகள் பழகவைத்த பிறகுதான் உபயோகிக்க வேண்டும். அப்பொழுதுதான் உலோகம் மருந்துடன் உறவாகும்.

# அநுபவ முறைகள்

கோ. து.

## திப்பிலாதி ரசாயனம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| திப்பிலி | பலம் | 16 | சுக்கு | பலம் | 2 |
| சர்க்கரை | ,, | 8 | கரிசாலை (உலர்ந்தது) | ,, | 2 |
| வாய்விளங்கம் | ,, | 4 | லோகசெந்தூரம் | ,, | 2 |
| கண்டுபாரங்கி | ,, | 4 | தான்றிக்காய் | ,, | 1 |
| மிளகு | ,, | 4 | நெல்லிமுள்ளி | ,, | 1 |
| சீரகம் | ,, | 4 | இலவங்கப் பட்டை | ,, | 1 |
| திப்பிலிமூலம் | ,, | 2 | ,, பத்திரி | ,, | 1 |
| செவ்வியம் | ,, | 2 | ஏலம் | ,, | 1 |
| சித்திரமூலம் | ,, | 2 | சாதிக்காய் | ,, | ½ |

மேற்கூறிய சரக்குகளில் செந்தூரம் தவிர மற்றவைகளை இடித்து வடிகட்டி மேற்படி யளவாக ஒன்றாய் சேர்த்து செந்தூரத்தையும் இட்டு நன்றாய் கலந்து சர்க்கரையும் தேனும் சேர்த்து அரைத்து ஒரு பாத்திரத்தில் பத்திரப் படுத்தவும்.

உபயோக அளவும் பத்தியமும்:—பெரிய கழற்காய் அளவு ஒரு தினத்திற்கு இருவேளையாக ஒரு மண்டலமாம். இச்சா பத்தியம்.

தீரும் நோய்கள்:—காச வகைகள், இருத்து நோய், பாண்டு, சுரம், வாயு, அக்னி மந்தம் முதலியனவாம்.

## நாவல் நெய்

நாவல்பட்டை பலம் 25 எடுத்து முறைப்படி ஒரு படி குடிநீர் செய்து, பசு நெய் அரைபடி ஊற்றி,

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஏலம் | பலம் | அரை | காட்டாத்திப் பூ | பலம் | அரை |
| இலவங்கப் பட்டை | ,, | ,, | காசிக்கட்டி | ,, | ,, |
| கர்க்கடகசிங்கி | ,, | ,, | மரமஞ்சள் | ,, | ,, |
| சீரகம் | ,, | ,, | சிறுநாகப் பூ | ,, | ,, |
| அதிமதுரம் | ,, | ,, | கோஷ்டம் | ,, | ,, |
| விளாம்பிசின் | ,, | ,, | அபின் | ,, | 1 |

இவைகளை மேற்படி குடிநீரால் மெழுகுபோல் அரைத்து அதில் கலக்கி காய்ச்சி மெழுகு பதத்தில் வடிகட்டி பத்திரப்படுத்தவும்.

உபயோக அளவும், பத்தியமும்:—இரு விராகன் வீதம் இரு வேளையாக ஒரு மண்டலம் கொள்ளவேண்டும். இச்சா பத்தியமாம்.

தீரும் நோய்கள்:—பெரும்பாடு, எலும்புருக்கி, பிரமேகம் இவைகளாம்.

# 1943-ம் ஆண்டு ஏப்ரல்மீ
# L.I.M. சோதனையில்
# தேறிய சித்த மாணவர்களின் பெயர்

................................

## IV ஆண்டு

இரண்டாம் வகுப்பு

S. சுப்பிரமணியம்

மூன்றும் வகுப்பு

R. சகுந்தலாபாய்

## III ஆண்டு

இரண்டாம் வகுப்பு

V. T. இராஜேஸ்வரி, A. V. துளசிராமன், R. வீரபத்திரன்.

மூன்றும் வகுப்பு

N இராமசந்திரன். S. வெங்கட ராவ். M. வெங்கடராமன்.
T. கனேசன். N. இராமலிங்கம்.

## II ஆண்டு

இரண்டாம் வகுப்பு

T. S. வெங்கடரங்கம். G. வெங்கடராஜுலு. M. E. P. இராணி.

## I ஆண்டு

மூன்றும் வகுப்பு

K. S. அலக்ஸாண்டர்.

---

Printed at the Rudisill Press, Royapettah Madras.
and Published by Dr. V. N. Sama Rao, L.I.M.
at 11, SWamy Pillay Street, Triplicane, Madras.

Regd. M. No. 4565

# தமிழ்
# மருத்துவப் பொழில்

(TAMIL SIDDHA MEDICAL MAGAZINE)

திங்கள் வெளியீடு.


| மலர் 3 | ஜூன் 1943 | இதழ் 6. |
|---|---|---|



ஆசிரியர்:

தமிழ்ப் பண்டிதரும், மருத்துவ பண்டிதருமான

மாங்காடு. வடிவேலு முதலியார்.



உரிமையாளர்:

காரியக்கமிட்டியார் : சித்த மாணவர் கழகம்.

கவர்ன்மெண்ட் இந்திய மருத்துவ பாடசாலை

கீழ்ப்பாக்கம், மதராஸ்.

# தமிழ்
# மருத்துவப் பொழில்
திங்கள் வெளியீடு

மலர் 3 | ஜூன் 1943 | இதழ் 6

## ஒப்பு நோக்கு

வெள்ளெழுத்தும் – பிரஸ்பையோப்பியாவும்

### வெள்ளெழுத்து

கூசும் விழியும் புகைந் திருந்தும் துறுதும் பார்வை தோற்றது
மாசுங் கண்ணும் பசிந் திருதுக்ம் மயக்குங் குணங்கள் பலவாகும்
தேசுங் குறையு மருட்சி யுண்டாம் திறமாய் கருமம் செய்யாது
ஏசுங் குணங்கள் வெள்ளெழுத்து என்றே சொல்லு இவை கண்டே

கண்கள் கூசும், பார்வை புகைந்து காட்டும், சமீப பார்வை தெரியாது. கண்கள் பிரகாசமில்லாது மயங்கிப் போயிருக்கும். பார்வையில் மயங்கச் செய்யும். இக்குணங்களிருப்பின் வெள்ளெழுத்தென்று சொல்லப்படும்.

கண் ஒளி குறையும், பொருள்களை நோக்கின் சரிவர தெரியாமல் சந்தேகத்தை உண்டு பண்ணும். இக் காரணங்களினல் படிக்கும் தொழிலை போன்ற தொழில்களை சரிவர செய்ய இயலாது.

(அ. ந. வி.)

### PRESBYOPIA

The failure of accommodation becomes evident gradually, and as a rule becomes apparent first in reading. Small print becomes indistinct, and in order to get with in the limits of his receding near point, the patient tends to hold his head back and his book well forwards, until a distance is reached when clear vision under any circumstances is difficult. Complaint is usually made of visual failure rather than visual fatigue. The printed page becomes indistinct and letters and words are confounded. Sooner or later, however symptoms of eye-strain appear. Headaches are complained of, and the eyes feel tired and ache, and tend to assume the chronically suffused appearance so frequently seen in middle aged adults.

*"The Practice of Refraction"*